**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 495/2023**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வசந்தா | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of April 22nd , 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் சுரண்டை, சிவகுருநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் தொழில் செய்து வந்தேன். சம்பவத்திற்கு பிறகு என்னால் பீடி சுற்ற இயலவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 எனது மகள். 18.06.2019 ம் தேதி, இரவு 08.40 மணியளவில் நான் வீட்டின் முன்பு பீடி சுற்றிக் கொண்டிருந்தேன். வீடு கிரையம் பேசி முடித்தோம். எதிரியிடமிருந்து ரூ.3,00,000/- அட்வான்ஸ் பணமாக பெற்றுக்கொண்டு கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது. பின்னால் எதிரியால் கிரையம் முடிக்க முடியாத நிலையில் அட்வான்ஸ் பணத்தை திருப்பி கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்ட விரோதத்தின் காரணமாக "தேவடியா மவளே, பணத்தை வாங்கிகிட்டு தரமாட்டீயா" என்று சொல்லி வலது முன்கையிலும், இடது தோள்பட்டையிலும், வலது கையின் மோதிர விரலிலும் வெட்டியதில் பாதி விரல் துண்டாகி விட்டது.(சாட்சி காயத்தழும்புகளையும், மேலும் பாதி துண்டான மோதிர விரலையும் காட்டி

சாட்சியம் அளித்தார்.) சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கும், பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்கு திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கும் சென்றேன். நான் சிகிச்சையில் இருந்தபோது, பேச முடியாத நிலையில் இருந்ததால், நடவடிக்கை எடுக்க அங்கு வந்த போலீசாரிடம் எனது மகள் புகார் வாக்குமூலம் கொடுத்தார். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

C KATHIRAVAN
Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.04.23 12:01:25 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 495/2023</u>**
**<u>வழக்கு சாட்சி PW-3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கவின் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of April 22nd , 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் சுரண்டை, சிவகுருநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வந்தேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 2019 ம் வருடம், தேதி நியாபகமில்லை இரவு சுமார் 08.00 மணியளவில் அ.சா.2 ன் வீட்டின் முன்பு கூட்டமாக இருந்தது. நான் போய் பார்த்தேன். எதிரி அ.சா.2 ஐ பார்த்து "தேவடியா மவளே" என்று கெட்ட வார்த்தைகளால் திட்டி கொண்டிருந்தார். எதிரி அ.சா.2 ஐ பார்த்து "தேவடியா மவளே, நீ ஏன் இன்னும் உயிரோடு இருக்க" என்று சொல்லி, தலையிலும், இடது தோள்பட்டையிலும், வலது உள்ளங்கையிலும், வலது மேல்கையிலும் மாறி, மாறி வெட்டினார். எதிரி கையில் அரிவாளை வைத்திருந்ததால், நாங்கள் யாரும் கிட்ட போகவில்லை. காயம்பட்ட அ.சா.2 ஐ தனியார் ஆம்புலன்ஸ் மூலம் தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர்

மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.04.23 12:01:33 +0530